V.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1962-63.

DEPUTY SPEAKER : The Hon. Sri C. Subramaniam, Minister for Finance will now present the Budget for the year 1962-63.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே 1962-63 நிதிஆண்டுக்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை[a] சமர்ப்பிக்க முன் வந்துள்ளேன். வழக்கம் போலவே, முழு ஆண்டுக்கும் உரிய மதிப்பீடுகள் தயாரிக்கப் பெற்றுள்ளன. ஆனால், மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இந்த நிதி நிலை அறிக்கையை இப்பொழுதே தயாரிக்க வேண்டியிருந்ததால் கிடைக்கக்கூடிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் இது தோராயமாகவே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பெற்றுள்ளது. ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஏற்பட இருக்கும் செலவினங்கட்கு மட்டும், நிதிக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படும். 1960-61-க்குரிய கணக்கு, 1961-62-க்குரிய திருத்திய மதிப்பீடு, 1962-63-க்குரிய திட்ட மதிப்பீடு ஆகியவற்றின் சுருக்கமான அறிக்கை[a] ஒன்று கனம் அங்கத்தினர்கட்கு அளிக்கப் பெற்றுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டம் இடைக்காலத்துக்குரியதானதால் வழக்கமாக வெளியிடும் விரிவான வரவு-செலவு வெளியீடுகள் தயாரிக்கப் பெறவில்லை. மானியக் கோரிக்கைகளின் சுருக்க வெளியீடு ஒன்று, தேவையான பல்வேறு தகவல்களுடன் தயாரிக்கப்பெற்றுள்ளது. வரும் பொதுத் தேர்தலின் பிறகு புதிய மந்திரி சபை ஏற்பட்டு தங்களுடைய கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவற்றிற்கு ஏற்ப இந்த மதிப்பீட்டைத் திருத்தஞ் செய்து, புதிய ஒரு வரவு-செலவுத் திட்டத்தை 1962-ம் ஆண்டு மே-ஜூன் மாதங்களில் இச் சபையில் சமர்ப்பிக்கும். முன்னுரை.

2. நடப்பு ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீட்டில் வருவாய் ரூ. 89,69 லட்சமாகவும், செலவு ரூ. 96,06 லட்சமாகவும், கணக்கிடப்பட்டுள்ளன. ஆக, ரெவின்யூக் கணக்கில் ரூ. 6,37 லட்சம் துண்டு விழுகின்றது. இவ்வளவு பெரிய தொகை துண்டு விழுவதற்குரிய காரணத்தை எளிதில் அறிந்துகொள்ள முடியும். சென்ற ஆண்டில் அமுலுக்கு வந்த சம்பளக் கமிஷனின் சிபாரிசுகளை நிறைவேற்ற ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கோடி செலவு ஆகும். இந்த நடப்பு ஆண்டிலிருந்து இச் செலவை முழு அளவில் ஏற்கவேண்டியுள்ளது. குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்காக மத்திய அரசினர் தந்துவந்த உதவித் தொகையாகிய சுமார் ரூ. 2·5 கோடியும் இந்த ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது. புதிய பஞ்சாயத்து ஆட்சி முறையை நிறுவியதன் காரணமாக பல்வேறு வகைகளில், குறிப்பாக இணை மானியம் வழங்கும் வகையில், அதிகப்படியான செலவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, தல செஸ் மேல் வரி இணை மானியமாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 100 மட்டும் அடையாள மானியமாக வழங்கியதற்கெதிராக, இப்பொழுது ரூ. 60 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு நல, வளர்ச்சித் துறைகளில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு மேற்பட்டுக் கணிசமான அளவில் செலவு அதிகரித்துள்ளது. உதாரணமாக, கல்வி (ரூ. 87 லட்சம்), மருத்துவம் (ரூ. 53 லட்சம்), பொதுச் சுகாதாரம் (ரூ. 32 லட்சம்), சமுதாய வளர்ச்சி (ரூ. 57 லட்சம்), சிவில் பணிகள் 1961-62 திருத்திய மதிப்பீடு.

---

a Printed as Appendix III on page 33 to 118 infra.

(ரூ. 43 லட்சம்), ஹரிஜன முன்னேற்றம் (ரூ 34 லட்சம்) போன்ற துறைகளில் அதிகமாக தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அளவிற்கு செலவினங்கள் அதிகரித்திருந்தும் ரூ. 2 கோடி அதிக வருமானம் வந்திருப்பதால்தான் துண்டு இந்த அளவில் நிற்கின்றது.

மூலதனக் கணக்கு, 961-62.

3. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மூலதன வகையில் மின்சாரத் திட்டங்களுக்கு ரூ. 15,41 லட்சம் ஒதுக்கியிருந்ததற்குப் பதிலாக, இப்பொழுது ரூ. 18,20 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பரம்பிக்குளம் திட்டத்திற்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கண்டிருந்த ரூ. 3,77 லட்சத்திற்கு எதிராக, ரூ. 4,40 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் செலவினங்களுக்காக அரசாங்கமும், மின்சார போர்டும் முறையே ரூ. 10,36 லட்சமும், ரூ 2,16 லட்சமும் பொதுக் கடன் எழுப்பியுள்ளன. இதன் பயனாக, ரெவின்யூக் கணக்கில் பெரிய அளவில் துண்டு விழுந்தாலும் வழிவகையில் சுமார் ரூ. 4·5 கோடி இருப்புடன் இந்த ஆண்டுக் கணக்கை முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் 1962-63.

4. 1962-63-க்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ. 92,71 லட்சம்; செலவு ரூ. 99,67 லட்சம்: ஆகவே துண்டு ரூ. 6,96 லட்சம். ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ள காரணங்களாலும், மேலும் மேலும் திட்டங்கள் வேகமாக நிறைவேற்றப்படுவதாலும், துண்டு இந்த அளவில் ஏற்படுகிறது. இந்த அளவில் துண்டு விழுவதைப் பற்றி அரசாங்கம் கவனித்தே ஆகவேண்டும். ஆனால், பொதுவாக மத்திய அரசின் வரி இனங்களின் வருமானம் வளர்ச்சியுற்று வருகின்றது. அதிலும் குறிப்பாக பொருள்களின் மேல் விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானம் கணிசமாக உயர்ந்து வருகிறது. ஆகவே, நம் மாநிலத்திற்கு இந்த வரி இனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பங்கு கணிசமாக உயர ஏது உண்டு. இது நமக்கு ஓரளவு நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

மேலும், மாநிலங்கட்கு மத்திய வருமானத்திலிருந்து கொடுக்கப்படும் பங்கைப்பற்றி மூன்றுவது நிதிக்கமிஷன் தற்போது ஆராய்ந்து வருகிறது. மாநில வரிகளில் பெரும்பாலானவை போதுமான அளவிற்கு விரிந்து கொடுப்பன அல்ல என்பதைப் பற்றியும், மக்களின் அடிப்படையான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மாநில அரசாங்கங்கள் மேலும் மேலும் அதிகப்படியான பொறுப்புகளை ஏற்கவேண்டியிருக்கிறது என்பது பற்றியும் நிதிக் கமிஷனுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். விரைவில் சமர்ப்பிக்கவுள்ள நிதிக் கமிஷனின் அறிக்கை தக்க முறையில் மாநிலங்கட்கு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம் மாநிலத்தின் நிதி நிலையை இதற்குப்பின் ஆராய்ந்து பார்ப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

மூலதனக் கணக்கு, 1962-63.

5. மூலதனக் கணக்கில் 1962-63-ல் பாசனத் துறைக்குள்ள ரூ. 7 கோடி உட்பட ரூ. 17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சாரத் திட்டங்களில் ரூ 18·5 கோடி முதலீடு செய்வதற்காக மின்சார போர்டுக்குத் தேவையான அளவுக்குக் கடன் வழங்கவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக அரசாங்கம் ரூ 10·5 கோடியும், மின்சார போர்டு ரூ 2 கோடியும் பொதுக் கடனாக எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9th December 1961] [Sri C. Subramaniam]

6. நடப்பு ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டத்திற்காக ரூ 47·87 கோடி செலவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டதற்குப் பதிலாக நிறைவேற்ற முறையில் ரூ. 50·60 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1962-63 மதிப்பீட்டில் திட்டச் செலவுக்கு ரூ. 55 கோடிக்கு வழி செய்திருந்தாலும், குறிப்பாகப் பாசனம், மின்சாரம் ஆகிய துறைகளில் ஒதுக்கப்பட்ட தொகைககு மேலாகவே அதிகம் செலவாகலாம் என்று தெரிகிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் எதிர்பாத்ததற்கு மேலான நிதி ஆதாரங்களைச் சேகரித்து, குறிப்பிட்டிருந்த அளவிற்கு மேலாகவே திட்டங்களை நிறைவேற்றினேம். அதே முறையில் மூன்றாவது திட்டக் காலத்திலும் நிதி ஆதாரங்களைச் சேகரித்து இன்று ஏற்பட்டிருக்கும் வேகத்திலேயே திட்டத்தை நிறைவேற்ற முன்வருவோமேயானல் மூன்றாவது திட்ட இலக்குகளையும் கணிசமாகக் கடந்து செல்ல முடியும். திட்டம்.

7. இது ஓர் இடைக்கால வரவு-செலவுத் திட்டமாயினும் வெள்ளை அறிக்கையின் பிற்சேர்க்கையில் காணப்படும் பட்டியலின்படி 100 புதுத் திட்டங்கள் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன. மத்திய அரசாங்கத்தார் திருச்சிராப்பள்ளியில் நிறுவப் போகின்ற பிராந்தியப் பொறியியல் கல்லூரியை அல்லாமல், சேலத்தில் புதிய பொறியியல் கல்லூரி ஒன்றை நிறுவவும் முடிவு செய்யப்பெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், பரமக்குடி, மேட்டூர் ஆகிய இடங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவவும் ஏற்பாடாகியுள்ளது. தூத்துக்குடியிலும், மாயூரத்திலும் பொதுப் பொறியியற் பட்டறைகள் நிறுவப்படும். நம்முடைய குழந்தைகள் அதிகப்படியான அளவில் படைகளில் சேருவதற்கு ஊக்கமும் பயிற்சியும் தரும் முறையில் பாதுகாப்பு அமைச்சின் உதவி கொண்டு இந்த மாநிலத்தில் ஒரு 'சயினிக்' பள்ளிக்கூடம் நிறுவ ஏற்பாடாகியுள்ளது. வசதி குறைந்த மக்களும் இந்தப் பள்ளியின் பயனை யடையும் முறையில் பெருவாரியான அளவில் உபகாரச் சம்பளங்கள் தரவும் ஏற்பாடாகியுள்ளது. ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்டுள்ளபடி 6—11 வயதுக் குழந்தைகளின் கட்டாயத் தொடக்கக் கல்வித் திட்டத்தையும், அதனேடு தொடர்புடையதாகிய மதிய உணவுத் திட்டத்தையும் விரிவு படுத்தவும் நிதி ஒதுக்கியுள்ளோம். 2—5 வயதுக் குழந்தைகட்குப் பயிற்சி அளிக்கும் ஒரு திட்டம் பற்றி அரசினர் சிலகாலமாக ஆராய்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு வளர்ச்சி மாவட்டத்திலும் ஒவ்வொரு வட்டாரத்தில், 2—5 வயதுக் குழந்தைகட்குப் பயிற்சி அளிக்கும் ஒரு முன்னேடித் திட்டத்தை நிறுவ வரவு-செலவுத் திட்டத்தில் இடம் செய்யப்பெற்றுள்ளது. குழந்தைகளுக்கென தனி நவீன மருத்துவ சாலை ஒன்றைச் சென்னையில் நிறுவவும் ஏற்பாடாகியுள்ளது. புதிய திட்டங்கள்.

8. அரசாங்கப் பணியாளர்கட்கும் ஆசிரியர்களுக்கும் புதிய சில வசதிகளைச் செய்து தரவும் வரவு-செலவுத் திட்டத்தில் இடம் செய்யப்பெற்றுள்ளது. பொறியியல், மருத்துவம், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகிய தொழிற் கல்வித் துறைகளில் பயில்கின்ற மாணவர்கட்கு, பெற்றோர்கள் அதிக செலவு செய்யவேண்டியிருக்கிறது. இதன் காரணமாக வசதியற்றவர்கள் இக் கல்வியைப் பெறும் வாய்ப்பில்லாது போய்விடுகிறது. இக் குறையை நீக்கி• இம் மக்களுக்கும் புதிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக இப்படிப்பிற்காக ஏற்படும்

[Sri C. Subramaniam] [9th December 1961

தொகையை வட்டியில்லாத கடனாக வழங்கி, சம்பாதிக்கத் தொடங்கியபின் இக்கடனை சௌகரியமான தவணைகளில் திருப்பிக்கட்டவும் ஒரு திட்டத்தை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. 1962-63-ல் இத் திட்டத்தின்கீழ் அரசிதழ் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளரின் மக்கட்கும், எல்லாப் பள்ளி ஆசிரியர்களின் மக்கட்கும் இச் சலுகையை வழங்க போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க சமீப காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஓய்வு ஊதியத் திட்டத்தை கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தொழில் ஆற்றிக்கொண்டிருக்கும் இடைக் காலத்தில் ஓர் ஆசிரியர் இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கு எவ்வித வசதியையும் செய்துதர இன்றுள்ள ஓய்வு ஊதியத் திட்டத்தில் இடம் இல்லை. அவர்களுடைய குடும்பங்களுக்கும் ஓரளவு நன்மை கிடைக்குமாறு அரசாங்கப் பணியாளர்கட்கு இப்பொழுது அமைந்துள்ள புதிய ஓய்வு ஊதியத் திட்டத்தை அனுசரித்து ஆசிரியர்கள் ஓய்வு ஊதியத் திட்டத்தையும் மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர்கட்கு அவ்வப்போது ஏற்படும் கஷ்ட காலங்களில் நிவாரணமளிக்க இந்திய அரசாங்கம் ஒரு க்ஷேம நிதியை ஏற்பாடு செய்ய முன்வந்துள்ளது. இவ்வாறு அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் எல்லோருக்குமே க்ஷேமநல நிதித் திட்டம் ஒன்று அமைப்பது பற்றி கொள்கையளவில் சர்க்கார் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆரம்பமாக போலீஸ் துறையினரைப் பொறுத்தவரை இத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு திருப்திகரமாக நடைபெற்று வருகிறது. ஆகவே, ஆசிரியர்கட்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் இத் திட்டத்திலும் நம் அரசாங்கமும் உடனே பங்குகொண்டு இந்த க்ஷேம நல நிதிக்குத் தக்க இணை மானியம் வழங்க முடிவு செய்துள்ளது.

முதியவர் ஓய்வு ஊதியம்.

9. கனம் அங்கத்தினர்கள் பெரும் அளவு திருப்தியடையக்கூடிய மற்றொரு புதிய திட்டத்தையும் நிறைவேற்ற சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. 65 வயதுக்கு மேற்பட்ட அனாதையான முதியவர்கள் அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 ஓய்வு ஊதியம் தர முடிவு செய்துள்ளோம். (ஆரவாரம்) அங்கஹீனமுடையவர்கள், அதாவது கண்ணிழந்தோர், ஊமைகள், தொழுநோயாளர், பிற உறுப்புக்களை இழந்து முடமானோர் இவர்களைப் பொறுத்த மட்டில் வயது வரம்பு 60 ஆக நிர்ணயிக்கப்படும். பிச்சைக்காரர்கள் இத் திட்டத்தின் நன்மையைப் பெற முடியாது. இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு கலெக்டர்களிடம் ஒப்புவிக்கப் படும்.

முடிவுரை.

10. சென்ற ஐந்தாண்டுகளாக இந்த மன்றம் பணியாற்றி வருகிறது. இந்த மன்றத்திற்கு நான் சமர்ப்பிக்கும் கடைசியான வரவு-செலவுத் திட்டமாகும் இது. பொறுப்பும், சிரமங்களும் மிகுந்த இப் பணியை நிறைவேற்றுவதற்கு பரிவையும், ஒத்துழைப்பையும் நல்கிய கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் நன்றியைச் செலுத்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

நம்மிடையே அரசியல் வேறுபாடுகள் பல இருக்கலாம். ஆயினும், நாட்டு மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் ஐந்தாண்டுத் திட்டப் பணிகளில் நாம் அனைவரும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதன் பயனாக, நம்மிடையே அடிப்படை ஒற்றுமை உணர்வு வளர்ந்துள்ளது. நமக்குப் பின்

9th December 1961] [Sri C. Subramaniam]

இச் சபைக்கு வரும் உறுப்பினர்கள், இந்த நன் மரபைப் போற்றி வளர்ப்பதுடன், மேலும் பல சிறந்த மரபுகளை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் 1962–63-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம் மன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 11th December 1961.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

409. Notification issued with G.O. Ms. No. 5773, Industries, Labour and Co-operation (Industries), dated 29th September 1961 amending the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956, published with Industries, Labour and Co-operation Department Notification No. 34 of 1956, dated the 20th August 1956, at pages 439–456 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 29th August 1956, as subsequently amended. [*Laid on the table of the House under section* 19 *of the Madras State Aid to Industries Act,* 1922 (*Madras Act V of* 1923).]

B. Reports, Notifications and other papers.

* 260. The Madras Agricultural Income-tax (Second Amendment) Bill, 1961.

* 261. The Sugar (Regulation of Production) Ordinance, 1961 (No. 3 of 1961) promulgated by the President in the twelfth year of Republic of India.

---

* Placed on the table of the House on 8th December 1961.